

ஈரோடு தெற்கு மாவட்டக் கழக தொழில்நுட்ப அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி சந்தோஷ் விஜயகுமார் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திவிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் மாநில, மாவட்ட , மாநகர, பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம்,பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி குத்தாலம் வடக்கு ஒன்றியம் திருவாலங்காடு பகுதியில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் குத்தாலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கு. வைத்தியநாதன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி எஸ், பாலமுருகன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சை மாவட்ட பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தென் பெரம்பூர் விண்ணமங்கலம் சாலையில் இருபுறமும் உள்ள சீமை கருவேலை மரங்களை நெடுஞ்சாலைத் துறை சார்பில் அகற்றும் பணியை தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தொடங்கி வைத்தார். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தஞ்சை து து.செல்வம், ஒன்றிய கழக செயலாளர் கௌதமன் மற்றும் அரசு அலுவலர்கள், ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் திருக்குவளையில் கலைஞர் பிறந்த இல்லத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சாதனை கலைஞர் என்ற தலைப்பில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றிப் பெற்றவர்களுக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் பரிசுகளை வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், கீழையூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ. பாரிபாலன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஆர்.துரைராஜ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிடோர் உள்ளனர்.

## திருச்சி மத்திய - வடக்கு மாவட்டங்களில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா - பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர்கள் க,வைரமணி– ந,தியாகராஜன் அறிவிப்பு!





*திருச்சி, ஜூன் 10-*

*திருச்சி மத்திய, வடக்கு மாவட்டங்களில் முத்தமிழ் அறிஞர்கலைஞர்அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கீழ்க்கண்ட விவரப்படி பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன என்று திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் ந. தியாகராஜன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.*

*1)20.06.2026-சனிக்கிழமை- கோவி. செழியன்- துறையூர், 2)20.06.2026-சனிக்கிழமை-மதிவதனி-எடமலைப்பட்டிபுதூர், 3) 21.06.2026-ஞாயிற்றுக்கிழமை-சுப.வீரபாண்டியன்-திருவானைக்கோவில், 4)27.06. 2026-சனிக்கிழமை- தமிமுன் அன்சாரி - மண்ணச்சநல்லூர்,5) 28.06.2026 -ஞாயிற்றுக்கிழமை- தங்க தமிழ்செல்வன் -இலால்குடி*

*இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.*


# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகப் பிரதிநிதி - பெரம்பூர் பகுதிக் கழகப் பிரதிநிதி

திராவிட இயக்க தீரர்

## திரு. K.வளவன் அவர்கள்

தோற்றம் : 16.04.1937 மறைவு : 08.06.2026 வயது : 89

[ 08.06.2026, திங்கட்கிழமை அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். ]

அவர்களின் இறுதி சடங்குகள் [ 10.06.2026 ] புதன்கிழமை, மாலை 4.00 மணியளவில் எண்.161/88, பி.பி.ரோடு, வியாசர்பாடி, [ பெரம்பூர் பேருந்து நிலையம் அருகில் ] சென்னை - 600 039. உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

திருவுருவ உடல் பார்வைக்கு 09.06.2026, செவ்வாய்கிழமை, மாலை 6 மணிமுதல் 10.06.2026, புதன்கிழமை, பிற்பகல் 3 மணிவரை வைக்கப்படும். தொடர்புக்கு : 98401 75381 / 9840656672

ஆழ்ந்த வருத்தத்துடன்...

நீலகண்டன் வளவன் B.E.,Washington,D.C. USA ● மேகநாதன் வளவன் B.E., CA,USA

திருமதி வளவன் யமுனாதேவி M.L., மு.சிறப்பு அரசு வழக்கறிஞர் ● ஜெய்சங்கர் வளவன் B.E., CA,USA

மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள்


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# ஜெ. அன்பழகன்

### ஜூன் 10 (2020)



மிசா பழக்கடை ஜெயராமன் மகனான இவர், தனது பள்ளிப் பருவம் முதலே தீவிர கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் தியாகராயர் நகர் பகுதியில் சார்பு மன்றச் செயலாளர், பகுதி பிரதிநிதி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என படிப்படியாக, சார்பு மன்ற செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சென்னை மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கியதோடு, கலைஞர் அவர்களைத் தனது தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றியவர். தியாகராயர் நகர் பகுதியிலும், ஒருங்கிணைந்த தென்சென்னை மாவட்டத்திலும், பிறகு சென்னை மேற்கு மாவட்டத்திலும் கழகத்திற்குச் சிறப்பாக வலுவூட்டியவர்.

கழகத் தலைவர் அவர்கள் இளைஞரணிச் செயலாளராக இருந்த காலம்தொட்டே அவரது நம்பிக்கை மிகுந்த உடன்பிறப்பாக, கொள்கைத் தோழனாக, இயக்கத்தின் இலட்சிய சகோதரன் என்கிற உணர்வுடன் நெருங்கிப் பழகியவர்.

2001 தியாகராயர்நகர் தொகுதியிலும், 2011, 2016களில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

1976ல் இந்திராகாந்திக்கு கருப்பு கொடி காட்ட திட்டமிட்டதாக கைது மற்றும் 1986ல் சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி திணிப்பு போராட்டம், விலைவாசி போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, அப்போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற பாடுபட்டவர்.

“மக்கள் பணியிலேயே தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரர் ஜெ.அன்பழகனின் பொதுவாழ்வு – கழகப்பணி – தியாக உணர்வுக்குத் தலைவணங்கி, கண்ணீர் பெருக்குவதன்றி, வேறு வழி எனக்குத் தெரியவில்லை” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**